செப்டம்பர் 9-15

பாடம் 12

# ஆவியினாலே வாழுதல்



**மனன வசனம்**

**நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். கலா 5:16 .**

**ஆராய்ச்சிக்கு**

**கலா 5:16-25; உபா 13:4,5; ரோமர் 7:14-24; எரே 7:9; ஓசியா 4:2; மத் 22:35-40.**

செப்டம்பர் 9 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

ராபர்ட் ராபின்சன் எழுதிய 'தாரும் சுத்த ஆவி தாரும்'' எனும் கிறிஸ்தவப் பாடல் அனைவரையும் தொடக்கூடிய ஒரு பாடல். ஆனாலும், ராபின்சன் முதலில் ஒரு விசுவாச வீரர் அல்லர். அவருடைய தகப்பனார் மரித்ததால் மிகவும் கோபமடைந்து, குடியிலும் கூத்திலும் மூழ்கினார். பிரபல போதகர் ஜார்ஜ் வைட் ல்டின் பிரசங்கத்தைக் கேட்டு, தனது வாழ்க்கையை கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தார். பிறகு, மெத்தடிஸ்ட் சபையின் போதகரானார். ''ஆ! உம் கிருபைக்கு நான் எதை ஈடாக்க முடியும்/ தினமும் நெருக்கப்படுகிறேன்/ அலைந்து திரியும் என் மனதை/உம் கிருபை உம்மோடு இணைக்கட்டும்' போன்ற வரிகள் முதலில் அவர் எழுதின பாடலில் இடம் பெற்றிருந்தன.

இதயம் அலைந்துதிரிவதென்பது கிறிஸ்தவத்திற்கு ஒத்துவராதென நினைத்த யாரோ ஒருவர், 'ஆண்டவரே, உம்மை ஆராதிக்கத்தான் விரும்புகிறேன், நான் சேவிக்கும் தேவனை நேசிக்கத்தான் ஆசைப்படுகிறேன்' என்று வரிகளை மாற்றி எழுதினார்.

ஆனால், ராபின்சனின் வார்த்தைகள் கிறிஸ்தவப் போராட்டத்தை மிகச்சரியாக விவரிக்கின்றன. விசுவாசிகளிடம் ஆவி, மாம்சம் எனும் இரண்டு இயல்புகள் உள்ளன. இரண்டும் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளன. நம் பாவஇயல்பானது, தேவனைவிட்டு நாம் அலைந்துதிரியத் 'தூண்டுகிறது'. ஆனாலும், அவருடைய ஆவிக்கு நம்மை ஒப்படைக்க நாம் முடிவுசெய்தால், நாம் மாம்ச இச்சைகளுக்கு அடிமையாகத் தேவையில்லை. இந்த வார மனன வசனத்தில் பவுல் வலியுறுத்தும் செய்தி அதுதான்.

2017, செப்டம்பர் 16 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## ஆவியினால் நடத்தப்படுதல்

**கலா 5:16 இல் உள்ள 'நடத்தல்' எனும் கருத்து, விசுவாச வாழ்க்கையில் எவ்வாறு செயல்படு கிறது? உபா 13:4,5; *ரோமர் 13:13; எபே 4:1,17; கொலோ 1:10.***

---

**'நடத்தல்'** எனும் உருவகம் பழைய ஏற்பாட்டிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது; ஒருவனுடைய நடத்தை எவ்விதம் இருக்கவேண்டுமென்பதை அது சுட்டிக்காட்டு கிறது. யூதராகிய பவுல், கிறிஸ்தவ வாழ்க்கையில் எத்தகைய நடத்தை காணப் படவேண்டுமென விவரிக்கிறார். ஆதிகாலச் சபை முதன்முதலில் என்ன பெய ரால் அழைக்கப்பட்டதென்பதையும் இந்த உருவகம் காட்டுகிறது. இயேசுவின் பின்னடியார்களுக்குக் கிறிஸ்தவர்கள் எனும் பெயர் வழங்கப்படுமுன்னர் (அப் 11:26), **'மார்க்கத்தார்'** என்று அழைக்கப்பட்டார்கள். யோவான் 14:6; அப் 22:4; 24:14. இயேசு கிறிஸ்துவை அடிப்படையாகக் கொண்ட சில வேதாகம நம்பிக் கைகளை மாத்திரம் மையமாக வைத்து, கிறிஸ்தவ மதம் செயல்படவில்லை. எந்த 'மார்க்கத்தில்' அதாவது, 'வழியில்' வாழ்க்கையை நடத்தவேண்டுமென்பதும் முக்கியமாகக் கருதப்பட்டது.

**'நடத்தல்' எனும் உருவகம் பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட விதத்திற்கும், பவுல் அதைப் பயன்படுத்தும் விதத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன? யாத் 16:4; *லேவி 18:4; எரே 44:23* வசனங்களை கலா 5:16,25; *ரோமர் 8:4* வசனங்களோடு ஒப்பிடுங்கள்.**

---

**'நடத்தல்'** எனும் உருவகம் பழைய ஏற்பாட்டில், நடத்தையைப் பற்றி அல்ல; 'நியாயப்பிரமாணத்தில் நடத்தல்'பற்றிச் சொல்லவே பயன்படுத்தப்பட்டுள்ளது. நியாயப்பிரமாணத்திலும் யூத ரபிமார்களின் எழுத்துகளிலும் சட்டதிட்டங்களை, **'ஹலாக்கா'** எனும் வார்த்தையால் யூதர்கள் குறிப்பிடுவார்கள். 'ஹலாக்கா' எனும் வார்த்தை 'யூதப்பிரமாணம்' என்று மொழிபெயர்க்கப்பட்டாலும், 'செல்லும் வழி' அல்லது 'நடத்தல்' என்பதற்கான எபிரெய வார்த்தையை அடிப்படையாகக் கொண்டுதான் அந்த வார்த்தை அமைந்துள்ளது.

'ஆவியினால் நடக்கும்படி' பவுல் கூறுவதால், நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியவேண்டாவென்று அவர் சொல்லவில்லை. நியாயப்பிரமாணத்திற்குப் புறம்பானவிதத்தில் கிறிஸ்தவர்கள் வாழலாமென்றும் அவர் அறிவுறுத்தவில்லை. நியாயப்பிரமாணத்திற்கோ, நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதற்கோ பவுல் முரணானவர் அல்லர். கிரியைத்துவத்தை முக்கியப்படுத்தும் விதத்தில் நியா யப்பிரமாணம் பயன்படக்கூடாதென்றுதான் எதிர்க்கிறார். தேவன் விரும்பும் மெய்யான கீழ்ப்படிதல் கட்டாயத்தினால் வருவதாக இருக்காது; ஆவியானவர் உருவாக்கும் உள்ளார்ந்த ஊக்கத்தால் வருவதாக இருக்கும். கலா 5:18.

'ஆவியினால் நடத்தப்படுதலில்' உங்கள் அனுபவம் என்ன? எவ்வாறு ஆவியில் நடத்தப் படுகிறீர்கள்? உங்கள் வாழ்விலுள்ள என்ன பழக்கங்கள் இவ்வாறு நடக்க முடியாதபடி உங்களைத் தடுக்கின்றன?

*மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. கலா 5:17.*

**இந்த வார்த்தைகளின் வேதனையான நிஜத்தை நீங்கள் உங்கள் விசுவாச வாழ்க்கையில் அனுபவித்திருக்கிறீர்களா? ரோமர் 7:14-24.**

பவுல் இங்குக் குறிப்பிடும் போராட்டம், ஒவ்வொரு மனிதனிலும் நடக்கும் போராட்டமல்ல; இது கிறிஸ்தவனின் உள்ளத்தில் நடக்கும் போராட்டம். மனிதர் பிறக்கும்போதே, மாம்ச இச்சைக்கு உட்பட்டவர்களாய் இருக்கிறார்கள். ரோமர் 8:7. எனவே, ஆவியினால் புதிதாகப் பிறக்கும்போதுதான் உண்மையான ஆவிக்குரிய போராட்டம் உருவாகிறது. யோவான் 3:6. கிறிஸ்தவர்கள் அல்லாதோரும் ஒழுக்கச் சம்பந்தமான போராட்டங்களைச் சந்திக்கவேசெய்கிறார்கள். அந்தப் போராட்டமும் ஆவியானவரால் உண்டாகும் ஒரு போராட்டம்தான். ஆனாலும், கிறிஸ்தவனுக்குள் ஏற்படும் போராட்டம் ஒரு புதிய பரிமாணத்தை எடுக்கிறது. ஏனெனில், அவனுக்குள் இருக்கும் மாம்சம், ஆவி எனும் இரண்டு இயல்புகள் ஒன்றுக்கொன்று முரணாகச் செயல்பட ஆரம்பிக்கின்றன.

இந்தப் போராட்டத்திலிருந்து விடுதலை கிடைக்குமாவென்று கிறிஸ்தவர்கள் ஏங்கிநின்றதை வரலாறு முழுவதிலும் காணலாம். இந்தப் போராட்டத்திற்கு ஒரு முடிவுகாண, சிலர் சமுதாயத்தைவிட்டே விலகினார்கள்; தேவகிருபை கிரியை செய்தால் பாவஇயல்பை முற்றிலும் அகற்றமுடியுமெனச் சிலர் கூறினார்கள். இரண்டுமே தவறுதான். ஆவியானவரின் வல்லமையால் நிச்சயமாகவே மாம்ச இச்சைகளை அடக்கி ஆளலாம். ஆனாலும், இரண்டாம் வருகையில் புதியதொரு சரீரத்தை நாம் பெறும்வரையிலும் ஏதாவது ஒரு விதத்தில் அந்தப் போராட்டம் தலைதூக்கவே செய்யும். எங்கு நாம் சென்றாலும், அந்தப் போராட்டமும் கூடவே சேர்ந்து வரும்; நாம் மரிக்கும்மட்டும் அல்லது இரண்டாம் வருகைமட்டும் அதை நாம் சந்திக்கவேண்டியிருக்கும்.

கிறிஸ்தவர்களுக்குள் நடக்கும் போராட்டமானது அவர்கள் செய்ய விரும்புகிறதைச் செய்யவிடாமல் அவர்களைத் தடுப்பதாகக் கூறுகிறார் பவுல். அதன் மூலம், அந்தப் போராட்டத்தின் முழுவீரியத்தைத் தெளிவுபடுத்துகிறார். நமக்குள் இரண்டு இயல்புகள் இருப்பதால், போராட்டத்தின்போது இரண்டையும் ஒரே நேரத்தில் நாம் சந்திக்க நேரிடுகிறது. ஆவிக்குரிய தன்மையோ, மாம்சத்தை அகற்றிவிட்டு, ஆவிக்குரிய காரியங்களை நாடும்படி சொல்கிறது. மாம்ச தன்மையோ, மாம்ச காரியங்களை நாடி, ஆவிக்குரியதை எதிர்க்கிறது. மனமாறிய இருதயம் தன்னால்தானே மாம்ச சிந்தையை அடக்கமுடியாது; எனவே, நம் இயல்புக்கு எதிராக ஆவியானவரோடு கைகோர்க்க அனுதினமும் நாம் தீர்மானிப்பதே மாம்சத்தை அடக்குவதற்கான ஒரே நம்பிக்கையாகும். எனவேதான், ஆவியினால் நடக்கும்படி பவுல் நம்மை மிகவும் வற்புறுத்துகிறார்.

ஓயாத இந்தப் போராட்டத்திலிருந்து விடுபட முயற்சிசெய்கிற கிறிஸ்தவர் ஒருவருக்கு உங்கள் அனுபவத்திலிருந்து என்ன ஆலோசனை வழங்குவீர்கள்?

## மாம்சத்தின் கிரியைகள்

மாம்சத்திற்கும் ஆவிக்கும் இடையே நடக்கும் போராட்டத்தைச் சொன்ன பிறகு, இந்தக் கருத்தை விவரிக்க நல்லொழுக்கங்களையும் தீயொழுக்கங்களையும் பட்டியலிடுகிறார். கலா 5:18-26. இதுபோன்ற பட்டியல்கள் யூத-கிரேக்க-ரோம-இலக்கியங்களிலும் சொல்லப்பட்டுள்ளன. தவிர்க்கவேண்டிய நடத்தைகளையும், பின்பற்றவேண்டிய நடத்தைகளையும் அவை சொல்கின்றன.

***எரே 7:9; ஓசியா 4:2; மாற்கு 7:21,22; 1 தீமோ 3:2,3; 1 பேதுரு 4:3; வெளி 21:8 ஆகியவை சொல்கின்ற நல்லொழுக்கங்களும் தீயொழுக்கங்களும் யாவை? கலா 5:19-24 இன் பட்டியலோடு இவை எவ்வாறு ஒத்திருக்கின்றன? எவ்வாறு மாறுபடுகின்றன?***

---

நல்லொழுக்கங்கள் இவை, தீயொழுக்கங்கள் இவையென்பது பவுலுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், கலாத்தியரில் அவற்றை அவர் சொல்லியிருக்கும் விதம்தான் கவனிக்கத்தக்கது. முதலில், இரண்டையும் அவர் வேறுபடுத்திக் காட்டினாலும், ஒரே பாணியில் இரண்டையும் அவர் குறிப்பிடவில்லை. தீயொழுக்கங்களை, 'மாம்சத்தின் கிரியைகள்' என்கிறார்; நல்லொழுக்கங்களை, 'ஆவியின் கனி' என்கிறார். இந்த வித்தியாசம் குறிப்பிடத்தக்கது. மாம்சம் 'இன்னும் வேண்டும்வேண்டும்' என்கிறது; ஆவியோ புதியதை உண்டாக்குகிறது. தன்னுரிமையை அதிகம் வலியுறுத்தி, சிற்றின்பத்தில் வெறித்தனமாக ஈடுபடுவது பற்றி ஒரு பட்டியல் பேசுகிறது. பிறர் நலம், அமைதி, நம்பகத்தன்மைபற்றி அடுத்த பட்டியல் பேசுகிறது. மனிதனின் மோசடித் தன்மையை ஒன்று எடுத்துக்காட்டுகிறது. தேவன் செய்யக்கூடியதை இன்னொன்று தெரிவிக்கிறது; உள்ளான மாற்றம்தான் நன்னடத்தையின் ஆதாரம் எனும் கருத்தை இது வலியுறுத்துகிறது.

இரண்டாவது வித்தியாசம் என்னவென்றால், தீயொழுக்கங்கள் 'மாம்சத்தின் கிரியைகள்' எனப் பன்மையில் சொல்லப்பட்டுள்ளன. ஆனால், 'ஆவியின் கனியோ' ஒருமையில் சொல்லப்பட்டுள்ளது. அதாவது, மாம்சத்தில் வாழும் வாழ்க்கையால் பிரிவு, குழப்பம், பாகுபாடு ஏற்படும். மாறாக, ஆவியின்படி வாழ்தல் ஒரே கனியைக் கொடுக்கும்; ஒற்றுமையை வளர்க்கும்; ஒன்பது வகையான குணங்களில் அந்தக் கனி வெளிப்படும்.

இதை வைத்து, 'ஒருவன் உண்மையுள்ளவனாக இருந்தால், தேவனைப் பற்றி ஒருவன் என்ன நினைக்கிறான் என்பது முக்கியமில்ல' என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால், இது சத்தியத்திற்குப் புறம்பானது. அதாவது, தேவனைப் பற்றின தவறான கருத்துகளால் பாலியல் நடத்தை, பக்தி, ஒழுக்கநெறிகள் போன்றவற்றில் தவறான அபிப்பிராயங்கள் ஏற்பட்டு, மனித உறவுகள் சீர்கெடும். மேலும், நித்திய வாழ்வை இழக்கும் நிலைமையும் ஏற்படும். கலா 5:21.

'மாம்சத்தின் கிரியைகளின்' பட்டியலை வாசியுங்கள். அதில் ஒவ்வொன்றும் பத்துக் கற்பனைகளில் ஏதாவது ஒரு கற்பனையை அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட கற்பனைகளை மீறும்விதத்தில் இருக்கின்றனவா?

*ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம். இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. கலா 5:22,23.*

**பத்துக்கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவது எவ்விதங்களிலெல்லாம் ஆவியின் கனியைப் பிரதிபலிப்பதாக உள்ளது? மத் 5:21,22,27,28; 22:35-40.**

---

பிறரிடம் அன்புகாட்டுவதும் பத்துக் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதும் வெவ்வேறானவை அல்ல. மனிதரிடமும் தேவனிடமும் நாம் எவ்வாறு அன்புகாட்ட வேண்டுமென்பதைப் பத்துக்கற்பனை சொல்லித் தருகிறது. நியாயப்பிரமாணத்தின் எழுத்து சொல்வதைவிட அன்பு மேலானதாக இருந்தாலும், அன்பு நியாயப்பிரமாணத்திற்கு முரணானது அல்ல. 'தேவனையும் மனிதரையும் நேசித்தால் போதும், பத்துக் கற்பனைகள் தேவையில்லை' என்று சொல்வது, 'இயற்கையை நேசித்தால் போதும், புவி ஈர்ப்பு விதி இல்லாமல் போகும்' என்று சொல்வது போலாகும்.

மாம்சத்தின் கிரியைகள் 15 வகைகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆவியின் கனியோ ஒன்பது நற்குணங்களால் விவரிக்கப்படுகிறது. இக்குணங்கள் மும்மூன்று கொத்துகளாக அமைந்திருப்பதாக வேத அறிஞர்கள் கூறுகிறார்கள். இந்த அமைப்பின் முக்கியத்துவம்பற்றிப் பலவிதக் கருத்துகள் நிலவுகின்றன. மூன்று மூன்றாக அமைந்திருப்பதால், அவை திரித்துவத்தைச் சுட்டிக்காட்டுவதாகச் சிலர் கூறுகிறார்கள். நாம் தேவனோடும், பிறரோடும், நம்மோடும் வைத்திருக்கவேண்டிய தொடர்பை அவை சுட்டிக்காட்டுவதாக சிலர் கூறுகிறார்கள். இயேசுவை அந்தப் பட்டியல் விவரிப்பதாகச் சிலர் கூறுகிறார்கள். ஆனால், மிகமுக்கியமானது இதுதான்: கிறிஸ்தவ வாழ்வில் காணப்பட வேண்டிய அன்பைத்தான் பவுல் அங்கு முக்கியப்படுத்துகிறார்.

ஒன்பது குணங்களில் அன்புக்கு பவுல் முதலிடம் தருவதற்குக் காரணமில்லாமல் இல்லை. கிறிஸ்தவ வாழ்வில் அன்பின் முக்கியத்துவத்தை கலா 5:6,13 இல் அவர் வலியுறுத்துகிறார். 2கொரி 6:6; 1தீமோ 4:12; 6:11; 2தீமோ 2:22 இலும் அன்பை வலியுறுத்துகிறார். எனவே, பல நற்குணங்களில் ஒன்று அன்பென நாம் கருதக்கூடாதென்று இவை தெரிவிக்கின்றன. மாறாக, மற்ற நற்குணங்களுக்கு அடிப்படையான ஒரு கிறிஸ்தவக் குணமாக அன்பு திகழ்கிறது. ஆவியின் கனியில் ஒப்புயர்வற்றது அன்பு. 1கொரி 13:13; ரோமர் 5:5. பிறர்மேல் அன்புகாட்டுவது கடினமாக இருந்தாலும், ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கையையும் மனப்பாங்கையும் அன்புதான் வரையறுக்கவேண்டும். யோவான் 13:34,35.

அன்பில் எவ்வளவுக்குச் சுயமறுப்பு காணப்படுகிறது? சுயமறுப்பு இல்லாமல் அன்பு கூருவது சாத்தியமா? அன்புபற்றியும், சுயமறுப்புபற்றியும் இயேசு நமக்குப் போதிப்பது என்ன?

மாம்சத்திற்கும் ஆவிக்கும் இடையே போராட்டம் ஒவ்வொரு கிறிஸ்தவனின் இருதயத்திற்குள்ளும் இருக்கும். அதற்காக, கிறிஸ்தவ வாழ்க்கையில் தோல்வியும் அடிமைத்தனமும் பாவமும்தான் காணப்படவேண்டுமென்கிற அவசியம் இல்லை.

***மாம்சத்தின்மேல் ஆவியானவர் அரசாட்சிசெய்வதற்கான வழிபற்றி கலா 5:16-26 சொல்வது என்ன?***

ஆவியானவர் ஆளுகைசெய்யும் வாழ்க்கையை விவரிக்க, கலா 5:16-26இல் பெரிபடியோ, எகோ, ஸவோ, ஸ்ட்டோய்க்கியோ, ஸ்டொவ்ரோவோ எனும் 5 வினைச்சொற்கள் பயன்படுகின்றன.

**1. பெரிபஃடெ:** கலா 5:16. ‘நடந்துசெல்தல் அல்லது பின்பற்றுதல்’ என்று அர்த்தம். பிரபல கிரேக்கத் தத்துவ ஞானி அரிஸ்டாட்டிலின் சீடர்கள் ‘பெரிபஃடெயர்கள்’ என்று அழைக்கப்பட்டார்கள். ஏனெனில், அரிஸ்டாட்டில் சென்ற இடங்களுக்கெல்லாம் அவர்பின் நடந்துசென்றார்கள். மேலும், அந்த வினைச்சொல் நிகழ்காலத்தில் உள்ளது; எனவே, எப்போதாவது செய்யவேண்டியதை அல்ல, அனுதின அனுபவமாக இருக்கவேண்டியதை இந்தச்சொல் காட்டுகிறது. அதாவது, ‘ஆவியில்’ நடப்பதற்கு அனுதின அடிப்படையில் நாம் தீர்மானங்களைச் செய்யவேண்டும்.

**2. எகோ:** கலா 5:18. ஆவியினால் ‘நடத்தப்பட’ வேண்டும். எனவே, நாம் எங்கே போகவேண்டுமென ஆவியானவர் நம்மை வழிநடத்த, நாம் அனுமதிதரவேண்டும். ரோமர் 8:14; 1கொரி 12:2. வழிநடத்துவது நம் வேலையல்ல; அவரைப் பின்பற்றுவதே நம் கடமை.

**3. ஸவோ:** கலா 5:23. ஆவியினால் ‘பிழைத்தல்’. ஒவ்வொரு விசுவாசியின் வாழ்விலும் காணப்படவேண்டிய புதுப்பிறப்பின் அவசியத்தை பவுல் இங்குச் சுட்டிக்காட்டுகிறார். இந்த அனுபவம் அனுதினமும் புதுப்பிக்கப்படவேண்டும் என்பதால், இதுவும் நிகழ்காலச் சொல்லாக வருகிறது. நாம் ஆவியினால் பிழைத்திருப்பதால், ஆவியினால் நடக்கவேண்டியது அவசியம்.

**4. ஸ்ட்டோய்க்கியோ:** கலா 5:23. இராணுவத்தில் பேசப்படும் வார்த்தை இது. ‘வரிசையில் நிற்றல்’, ‘பின்பற்றுதல்’, ‘ஒத்துநடத்தல்’ என்று அர்த்தம். ஆவியானவர் நம்மைப் பிழைக்கச்செய்வதோடு, அனுதினமும் நம் வாழ்க்கையை வழிநடத்திச் செல்கிறார் என்பதை இது வலியுறுத்துகிறது.

**5. ஸ்டொவ்ரோவோ:** கலா 5:24. ‘சிலுவையில் அறை’ என்று அர்த்தம். இது சற்றுத் திகைப்பாக இருக்கலாம். ஆவியானவரை நாம் பின்பற்றினால், நம் சொந்த ஆசைகளைச் சிலுவையில் அறைய நாம் உறுதியான தீர்மானம் எடுக்கவேண்டும். இங்கு உருவகமாகப் பேசுகிறார் பவுல். அதாவது, ஆவியின் நடத்துதலுக்கு ஊட்டமளித்து, சொந்த ஆசைகளைப் பட்டினிபோடும்போது, மாம்சத்தைச் சிலுவையில் அறைகிறோம்.

கிறிஸ்துவுக்குள் நமக்கு வாக்களிக்கப்பட்டிருந்தும், நம்மைவிட்டு நழுவிச்செல்லும் வெற்றிகளை நாம் பெற்றுக்கொள்ள என்ன தீர்மானங்களை நாம் செய்யவேண்டும்?

“கிறிஸ்தவனின் வாழ்க்கை எப்போதும் சுமூகமாக இருப்பதில்லை. கடும் போராட்டங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். பெரும் சோதனைகள் அவனைத் தாக்கும். ‘மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்திற்கு விரோதமாக வும் இச்சிக்கிறது. பூமியின் சகாப்தம் இறுதிக்கட்டத்தை நெருங்கும்போது, சத்துரு வின் தாக்குதல்களில் வஞ்சகமும் கண்ணிகளும் நிறைந்திருக்கும்; சத்தியத்தையும் வெளிச்சத்தையும் எதிர்க்கிறவர்களின் மனது கடினமாகும்; இறுகிப்போகும். தேவனை நேசித்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்கிறவர்களைக் கசப்போடு பார்ப்பார்கள்.” – *6 SDABC, p 1111.*

“பரிசுத்த ஆவியானவர் ஏற்படுத்தும் தாக்கம்தான் நம் ஆத்துமாவில் கிறிஸ்துவின் வாழ்க்கையாய் இருக்கிறது. நாம் கிறிஸ்துவைக் காணவும், அவரிடம் பேசவும் முடியாது. ஆனால், நாம் எங்கிருந்தாலும் அவருடைய ஆவியானவர் நமக்கு அருகிலேயே இருக்கிறார். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறவர்களுக்குள்ளும், அவர்கள் மூலமாகவும் அவர் கிரியைசெய்கிறார். ஆவியானவர் தங்களுக்குள் வாசஞ்செய்வதை அறிந்தவர்கள், அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் போன்ற ஆவியின் கனிகளை வெளிப்படுத்துவார்கள்’ – *6 SDABC, p 1112.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *மாம்சத்தின் இச்சைகளைச் சிலுவையில் அறைவது என்றால் என்ன? இதை எவ்வாறு, எப்போதெல்லாம் செய்யவேண்டும்? இது எவ்வளவு கடினமானது?*
2. *ஆவியின் கனியைப் பெறுவதில் மனிதமுயற்சியின் பங்கு என்ன? அந்தப் பங்கைப்பற்றி உங்கள் அனுபவத்திலிருந்து நீங்கள் அறிந்தது என்ன?*
3. *மாம்சக் கிரியைக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை என்கிறார் பவுல். கிரியைகளால் அல்ல, விசுவாசத்தால்தான் இரட்சிக்கப்படுகிறோம் என்று அவர் சொல் வதற்கும் இதற்கும் உள்ள ஒற்றுமை என்ன?*
4. *ஆண்டவரோடு உங்களுக்குள்ள அனுபவத்தில் நீங்கள் சந்தித்த மிகப்பெரும் சவால் என்ன? பாவத்தின்மேல் வெற்றி நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், பாவத்தால் சந்தேகமும் ஏமாற்றமும் அடையாத கிறிஸ்தவர் யாராவது உண்டா?*

**பாடச்சுருக்கம்:** *மாம்ச இச்சைக்கும் ஆவியின் இச்சைக்கும் இடையே ஒவ்வொரு விசுவாசியின் வாழ்விலும் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. ஆனாலும், கிறிஸ்தவ வாழ்க்கை தோல்வியடைய வேண்டியதில்லை. பாவத்தின் வல்லமையையும், மரணத்தின் வல்லமையையும் கிறிஸ்து ஜெயங்கொண்டார். எனவே, ஆவியானவர் ஆளுகை செய்யும் வாழ்க்கையாக கிறிஸ்தவவாழ்க்கை விளங்குகிறது. மாம்சத்தின் இச்சைகளை நாம் அடக்கத் தேவையான தேவகிருபையை அது அனுதினமும் தருகிறது.*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.